# தி.மு.க. இலக்கிய அணி ஒன்றிய, நகர, பேரூர், பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

27 - ஆம் பக்கத் தொடர்ச்சி

கங்கை மாவட்டம். 2) சே. ஆண்டனி நடராஜபுரம் தேவகோட்டை, தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம். 3) ரா. குணசேகரன் பெரியார் தெரு, தேவகோட்டை, தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம். 4) அ. சாகுல் ஹமீது காந்தி ரோடு, தேவகோட்டை, தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம்.

### சிவகங்கை நகரம்

அமைப்பாளர் - கி.முத்துக்கண்ணன் திருப்பத்தூர் ரோடு சிவகங்கை மாவட்டம.

துணை அமைப்பாளர்கள் - 1) சி.பி.அதியமான் மஜித் ரோடு, சிவகங்கை மாவட்டம். 2) ச.முருகானந்தம் கோகலே தெரு, சிவகங்கை 3) மு.தமிழரசன் மஜித் ரோடு சிவகங்கை 4) மு.பிரபாகரன் பிள்ளைவயல் காளியம்மன் கோவில் தெரு, சிவகங்கை 5) ரா.முனிராஜ் இந்திரா நகர் சிவகங்கை

### மானாமதுரை நகரம்

அமைப்பாளர் - க. மோகனசுந்தரம் மறவர் தெரு, மானாமதுரை. சிவகங்கை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சு. அன்பரசன் கன்னார் தெரு, மானாமதுரை. சிவகங்கை. 2) ப. மாசாணம் பழைய போஸ்ட் ஆபிஸ் தெரு, மானாமதுரை, சிவகங்கை. 3) பெ. செல்வராஜா, குலாளர் தெரு, மானாமதுரை, சிவகங்கை. 4) வெ. கண்ணதாசன், அண்ணா நகர், மானாமதுரை. சிவகங்கை மாவட்டம். 5) அ. பாலசுப்பிரமணியன் புதுத்தெரு, மானாமதுரை. சிவகங்கை.

### புதுவயல் பேரூர்

அமைப்பாளர் - சா. முத்துக்குமார் 3-3, மேற்குரத வீதி, சாக்கோட்டை, காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வீ. அன்பழகன் 347, வடக்கு ரத வீதி, சாக்கோட்டை, காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம். 2) கோவிந்தராஜ் 10-2-32, அக்னி பிள்ளையார் கோவில் தெரு, சாக்கோட்டை, காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம். 3) அ. தமிழரசன் 5/5-12ஏ, வடக்கு ரத வீதி, சாக்கோட்டை, காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

### கண்டனூர் பேரூர்

அமைப்பாளர் - க. சிங்காரம் படேல் தெரு, கண்டனூர், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம் - 630104.

துணை அமைப்பாளர்கள் - 1) பா.முனியப்பன் திலகர் தெரு, கண்டனூர், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம் - 630104. 2) சுப.நாகராஜன் தெற்கு பகுதி, புதுவயல் மெயின் ரோடு, கண்டனூர், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம் - 630104. 3) செ. மாரிமுத்து ஜீவா நகர், பாலையூர், கண்டனூர், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம் - 630104.

### பள்ளத்தூர் பேரூர்

அமைப்பாளர் - சு. முருகானந்தம் உ.அ.வீதி, பள்ளத்தூர், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ரா. நாகேந்திரன் மெயின் ரோடு, பள்ளத்தூர், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம். 2) சா. செல்வம் கருமாரியம்மன் கோவில் தெரு, பள்ளத்தூர், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம். 3) கா. வேலுச்சாமி முருகர் தெரு, பள்ளத்தூர், காரைக்குடி வட்டம், , சிவகங்கை மாவட்டம். 4) செ. பாண்டிச்செல்வி பி.ஆர்.எம் தெரு, பள்ளத்தூர், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

### கோட்டையூர் பேரூர்

அமைப்பாளர் - மா.சுந்தரம் 21, காட்டூரணி கிழக்கு, கோட்டையூர், சிவகங்கை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்ஆர்.முத்தையா காட்டூரணி மேற்கு, கோட்டையூர், சிவகங்கை மாவட்டம். 2) எஸ். சேதுராம் 71/10- எச். சரோஜா இல்லம், ஸ்ரீ ராம் நகர், கோட்டையூர், சிவகங்கை. 3) மெ.அர்ஜீணன் 45/90 அம்பேத்கார் தெரு, கோட்டையூர், சிவகங்கை.

### கானாடுகாத்தான் பேரூர்

அமைப்பாளர் - எம்.மகேஷ்வரி பழையூர், கானாடுகாத்தான் சிவகங்கை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. கனிமொழி பழையூர்,கானாடுகாத்தான் சிவகங்கை மாவட்டம். 2) மு. கவிதா பழையூர்,கானாடுகாத்தான் சிவகங்கை மாவட்டம். 3) லெ. மாதவி பழையூர்,கானாடுகாத்தான் சிவகங்கை மாவட்டம்.

### நெற்குப்பை பேரூர்

அமைப்பாளர் - அ. ஆண்டியப்பன் பரியாமருதுபடி நெற்குப்பை , திருப்பத்தூர் வட்டம் சிவகங்கை மாவட்டம் - 630405.

துணை அமைப்பாளர்கள் - 1) மு. வைத்தியலிங்கம் ந. பழ.தெரு, நெற்குப்பை , திருப்பத்தூர் வட்டம் சிவகங்கை மாவட்டம் - 630405. 2) சுப்பிரமணியன் ராஜவீதி ,நெற்குப்பை, திருப்பத்தூர் வட்டம் சிவகங்கை மாவட்டம் - 630405. 3) பு. முருகப்பன் கட்டளிப்புக்களம், நெற்குப்பை 630405 திருப்பத்தூர் வட்டம் சிவகங்கை மாவட்டம்

### திருப்பத்தூர் பேரூர்

அமைப்பாளர் - எஸ்.இளஞ்செழியன் வட்டாட்சியர் அலுவலக சாலை, திருப்பத்தூர். சிவகங்கை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ்.பழனிக்குமார் திருப்பத்தூர். சிவகங்கை. 2) எஸ்.காளிமுத்து காளியம்மன் கோவில் தெரு, திருப்பத்தூர். சிவகங்கை மாவட்டம். 3) கா.கணேசன் சேது ராமசாமி பிள்ளை தெரு, திருப்பத்தூர். சிவகங்கை மாவட்டம்.

### சிங்கம்புணரி பேரூர்

அமைப்பாளர் - த.கார்த்திகேயன் சுந்தரம் நகர் மேற்கு, சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம். - 630502.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ் ஆசிக் முகமது சிலோன் தெரு, சிங்கம்புணரி,, சிவகங்கை மாவட்டம் - 630502. 2) சுப்புடு நாராயணன் வடக்கு தெரு, சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம் - 630502. 3) ப. மணிவண்ணன் அண்ணா நகர், சிங்கம்புணரி, சிவகங்கை - 630502.

### நாட்டரசன்கோட்டை பேரூர்

அமைப்பாளர் - கே.முத்தையா நாட்டரசன்கோட்டை, சிவகங்கை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர்.வேலு நாட்டரசன் கோட்டை, சிவகங்கை மாவட்டம். 2) கே.கண்ணன் நாட்டரசன்கோட்டை, சிவகங்கை மாவட்டம். 3) டி. துரைமாணிக்கம் நாட்டரசன்கோட்டை, சிவகங்கை மாவட்டம். 4) த விக்னேஷ் நாட்டரசன்கோட்டை, சிவகங்கை மாவட்டம்.

### திருப்புவனம் பேரூர்

அமைப்பாளர் - க. அழகேந்திரன் மாதவன் நகர் திருப்புவனம் புதூர், சிவகங்கை மாவட்டம் - 630611.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆ. சந்திரசேகர் இந்திரா நகர் திருப்புவனம் 630611 சிவகங்கை மாவட்டம் - 630611. 2) கு. ராஜ் மதுரை மண்டபம் திருப்புவனம், சிவகங்கை மாவட்டம் - 630611. 3) கு. செல்வகுமார் குயவன் கோவில் தெரு திருப்புவனம், சிவகங்கை மாவட்டம் - 630611.

### இளையான்குடி பேரூர்

அமைப்பாளர் - அ. தௌலத் தக்கட்டை தெரு, இளையான்குடி, சிவகங்கை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மா.வெற்றிவேலன் நேருஜி சந்து, இளையான்குடி, சிவகங்கை மாவட்டம். 2) கு.ரகுமத்துல்லா குப்பை பிச்சை தெரு, சோதுகுடி, இளையான்குடி, சிவகங்கை மாவட்டம். 3) வெ. அர்ச்சனா நேருஜி சந்து, இளையான்குடி, சிவகங்கை மாவட்டம். 4) க. ராவுத்தர் நெய்னார் சுல்தான் அலாவுதீன் தெரு, இளையான்குடி, சிவகங்கை மாவட்டம்.

**குறிப்பு : சிவகங்கை வடக்கு, தெற்கு, மேற்கு, மானாமதுரை கிழக்கு, மேற்கு, வடக்கு, திருப்புவனம் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14-08-2025.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி



இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்படவுள்ள மூலக்கொத்தளம் விளையாட்டு அரங்கத்தின் பூமி பூஜையில் நேற்று (14.8.2025) அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருஜட்டும் இரா.மூர்த்தி, சிஎடி உறுப்பினர் செயலர் முதன்மைச் செயலாளர் கோபிரகாஷ் மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருகட்டா ரவி தேஜா. மாநகராட்சி நகரமைப்பு குழுத்தலைவர் இளைய அருணா. மண்டலக் குழுத்தலைவர் திருபியூரீராமுது, சிஎம்டி தலைமைப் பொறியாளர் திருமகாவிஷ்ணு. கண்காணிப்புப் பொறியாளர் திருராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர் திருமதிவேளாங்கன்னி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் அடிவாரத்தில் அமைந்துள்ள சண்முகர் திருமண மண்டபத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பாக அமைக்கப்பட்ட பல்துறை பணி விளக்க கண்காட்சி நடைபெற்று வருகிறது இதனை சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்து பார்வையிட்டார் உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி , செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் பி.அஸ்வின் குமார், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் செல்வி. கனிமொழி, திருத்தணி நகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியம், திருத்தணி நகர்மன்ற தலைவர் சரஸ்வதி பூபதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உள்ளனர்.

நிலுவையில் உள்ள

## சர்க்கரை ஆலைகளின் நவீனமயமாக்கல் திட்டத்தை விரைந்து முடித்திடுக!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தல்!

*சென்னை, ஆக.15-*

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் செயல்படுத்தப்பட்டுள்ள இணைமின் உற்பத்தி மற்றும் ஆலை நவீனமயமாக்கல் திட்டத்தின் செயல்பாடு மற்றும் திட்டம் நிலுவையில் உள்ள சர்க்கரை ஆலைகளில் திட்டத்தை முடித்து செயல்பாட்டுக்கு கொண்டு வர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் தலைமையில் நேற்று (14.08.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக நிறுவன உயர் அலுவலர்கள் மற்றும் சர்க்கரைத்துறை சார்ந்த உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டில் இயங்கி வரும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்தவும், சர்க்கரை ஆலைகளின் வருவாயை பெருக்கும் நோக்கத்துடனும் 12 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் நாள் ஒன்றுக்கு 183 மெ.வாட் உற்பத்திதிறன் கொண்ட இணைமின் உற்பத்தி திட்டம் கொண்டு வரப்பட்டது.

வேலூர், செய்யார், செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் அறிஞர் அண்ணா மற்றும் பெரம்பலூர் ஆகிய பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலும் மட்டுமே திட்டம் செயல்பட்டு வந்த நிலையில், கடந்த 2021ஆம் ஆண்டு முதலமைச்சர் தலைமையில் இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், இணைமின் திட்டம் கிடப்பில் போடப்பட்ட தர்மபுரி, எம்.ஆர்.கே, கள்ளக்குறிச்சி 1, கள்ளக்குறிச்சி 2, சுப்ரமணியசிவா, மோகனூர் மற்றும் நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் திட்டத்தை விரைந்து முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளின் காரணமாக தர்மபுரி மற்றும் எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணிகள் முடிக்கப்பட்டு திட்டம் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள ஏழு கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் இதுவரை 55.61 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக நிறுவனத்திற்கு ரூபாய் 322.04 கோடி மதிப்புள்ள மின்சாரம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு, திட்டம் நிலுவையில் உள்ள கள்ளக்குறிச்சி 1, கள்ளக்குறிச்சி 2, சுப்ரமணியசிவா, மோகனூர் மற்றும் நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் திட்டத்தை முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வரும் நோக்கத்துடன் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நேற்று (14.08.2025) சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்களின் தலைமையில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், வ.தட்சிணாமூர்த்தி, சர்க்கரைத்துறை இயக்குநர், த.அன்பழகன், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் அனீஷ் சேகர், சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குநர் பி. பாலமுருகன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் திருமதி. டி. ரமணிதேவி, தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக உயர் அலுவலர்கள், வால்சந்த்நகர் தொழில் நிறுவன உயர் அலுவலர்கள் மற்றும் சர்க்கரைத்துறை சார்ந்த உயர் அலுவலர்களின் ஆய்வு கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நிலுவையில் உள்ள ஐந்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் முடிக்கப்பட்டுள்ள பணி விவரங்களையும், நிலுவையில் உள்ள பணி விவரங்களையும் இனம் வாரியாக ஆய்வு செய்து தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக உயர் அலுவலர்களையும், வால்சந்த்நகர் தொழில் நிறுவன உயர் அலுவலர்களை திட்டத்தை விரைந்து முடிக்க ஏதுவாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு திட்டம் உடனடியாக செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என வலியுறுத்தி கேட்டுக் கொண்டார்.

மேலும், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும் சர்க்கரைத்துறை உயர் அலுவலர்களை பணியின் முன்னேற்றத்தை அவ்வப்போது கண்காணித்து திட்டத்தை தொய்வின்றி முடிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்குமறு அறிவுறுத்தினார்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து திருத்தணி சட்டமன்ற தொகுதி திருத்தணி ஒன்றியம் கோரமங்கலம் ஊராட்சி கூட்டுறவு நியாய விலைக்கடை பகுதியில் இத்திட்டத்தை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்து, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே நேரில் சென்று குடிமைப் பொருட்களை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் அமுதா, ஒன்றிய நிர்வாகிகள் ஆகூர் மாணிக்கம், நரசிம்மராஜு, ஷெரிப், ஹரிபாபு, கோவேந்தன் உள்பட பலர் உள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில்

## 4வது சர்வதேச பட்டம் விடும் திருவிழா!

### அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தனர்!

*சென்னை,ஆக.15-*

தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில் 4வது சர்வதேச பட்டம் விடும் திருவிழாவினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் , சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லப்புரத்தில் திருவிடந்தை கடற்கரையில் நேற்று (14.08.2025) தொடங்கி வைத்து, பட்டம் விட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, தமிழ்நாட்டில் சுற்றுலாவை ஊக்குவிக்க பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு சிறப்பு அம்சமாக சர்வதேச பட்டம்விடும் திருவிழா சுற்றுலாத் துறை வாயிலாக கடந்த 2022ஆம் ஆண்டு முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது, இந்த ஆண்டு 4வது “சர்வதேச பட்டம் விடும் திருவிழா” நேற்று செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம், திருவிடந்தை கடற்கரையில் நடைபெற்றது.

இந்த பட்டம் விடும் திருவிழாவானது 14.08.2025 முதல் 17.08.2025 வரை நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெறும். இந்த விழா உலகம் முழுவதிலுமிருந்து பட்டம் விடும் ஆர்வலர்களை ஈர்ப்பதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் விருந்தோம்பல், கலாச்சாரம் மற்றும் இயற்கை அழகை சர்வதேச அளவில் அறிய உதவுகிறது. மேலும், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, வியட்நாம், சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் நம் நாட்டில் இருந்தும் 8க்கும் மேற்பட்ட குழுக்கள், 40க்கும் மேற்பட்ட பட்டம் விடும் திறமையாளர்களுடன் 250க்கும் மேற்பட்ட பிரமிக்க வைக்கும் (LED) வண்ணப் பட்டங்கள் பறக்கவிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் கலாச்சார, பாரம்பரியத்தை சர்வதேச அளவில் பறைசாற்றும் வகையில் ஜல்லிக்கட்டு, காளை பட்டம் ஒரு சிறப்பு அம்சமாக பறக்க விடப்பட்டது.

மேலும் கீழ்வானத்தில் அதிசய செயற்கை சூரிய ஒளி, ஒளிரும் வண்ணமாகவும், இராட்சத ஆக்டோபஸ் பட்டம் மற்றும் ரோபொட்டிக் பட்டங்கள் என பல்வேறு வகையான வண்ணப்பட்டங்கள் பறக்கவிடப்பட்டது.

இந்த பட்டம் விடும் திருவிழாவானது, மதியம் 3 மணி தொடங்கி மாலை 6.00 மணி வரை நடைபெற்றது.

மேலும் பார்வையாளர்களுக்கென பிரத்யேகமாக மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நான்கு நாட்களுக்கு கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும். இந்த பட்டம் விடும் திருவிழாவிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு அனுமதி இலவசமாகவும். பெரியவர்களுக்கு நுழைவுக் கட்டணமும் நிர்ணயக்கப்பட்டுள்ளது, மேலும் 60க்கும் மேற்பட்ட சிற்றுண்டி உணவகங்கள் மற்றும் சிறிய கடைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி ம.வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி தி. சினேகா, இ.ஆ.ப., செங்கல்பட்டு சார் ஆட்சியர் திருமதி எஸ்.மாலதி ஹெலன், பொது மேலாளர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திருமதி ச. கவிதா, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் இதயவர்மன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ.நகர் மார்க்கெட் அருகில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 150 தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் ஏ.காசீம் முஹம்மது, சே.அரசு, ப.சேகர், பொன் கோதண்டன், நா.பரசுராமன், வி.ஞானம், துளசிராஜேந்திரன், இரத்தனமாலா, சரஸ்வதிசெல்வம், ராதிகா, பூபாலன், எம்.ஜி.கார்த்திக், ப.சு.க.இளங்கோவன், மு.கீதாராமன், கே.வி.தியாகராஜன், எஸ்.ஞானப்பன், ஆட்டோகர்ணா, எஸ்.நாகராஜ் எம். முகம்மது அலி, ஆர்.சி.சிவசங்கர். க.பிரபு. கே.கண்ணன், வீ. வெங்கடேசன், ஆர்.குமரன், ஏ.சந்திரன், எம்.முத்தையா, எம்.ஹயாத்பீ, ஆர்.வாணிரகுபதி, ஆர்.ஜெயா, ஆர். புவனேஸ்வரி, தி.மாரியம்மாள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.